ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தாவளந்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தாவளந்து ॥

## திருநாங்கூர்க் காவளம்பாடி

‡தாவளந்துலக முற்றும்⋆ தட மலர்ப் பொய்கை புக்கு⋆
நா வளம் நவின்றங்கேத்த⋆ நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்⋆
மா வளம் பெருகி மன்னு⋆ மறையவர் வாழும் நாங்கை⋆
காவளம் பாடி மேய⋆ கண்ணனே! களைகண் நீயே (1)

மண் இடந்தேனம் ஆகி⋆ மாவலி வலி தொலைப்பான்⋆
விண்ணவர் வேண்டச் சென்று⋆ வேள்வியில் குறை இரந்தாய்!⋆
துண்ணென மாற்றார் தம்மைத்⋆ தொலைத்தவர் நாங்கை மேய⋆
கண்ணனே! காவளந் தண் பாடியாய்!⋆ களைகண் நீயே (2)

உருத்தெழு வாலி மார்வில்⋆ ஒரு கணை உருவவோட்டி⋆
கருத்துடைத் தம்பிக்கு⋆ இன்பக் கதிர் முடி அரசளித்தாய்⋆
பருத்தெழு பலவும் மாவும்⋆ பழம் விழுந்தொழுகும் நாங்கை⋆
கருத்தனே! காவளம் தண் பாடியாய்!⋆ களைகண் நீயே (3)

முனை முகத்தரக்கன் மாள⋆ முடிகள் பத்தறுத்து வீழ்த்து⋆ ஆங்-
கனையவற்கிளையவற்கே⋆ அரசளித்தருளினானே⋆
சுனைகளில் கயல்கள் பாயச்⋆ சுரும்புதேன் நுகரும் நாங்கை⋆
கனை கழல் காவளம் தண் பாடியாய்!⋆ களைகண் நீயே (4)

படவரவுச்சி தன்மேல்⋆ பாய்ந்து பல் நடங்கள் செய்து⋆
மடவரல் மங்கை தன்னை⋆ மார்வகத்திருத்தினானே!⋆
தடவரை தங்கு மாடத்⋆ தகு புகழ் நாங்கை மேய⋆
கடவுளே! காவளம் தண் பாடியாய்!⋆ களைகண் நீயே (5)

மல்லரை அட்டு மாளக்⋆ கஞ்சனை மலைந்து கொன்று⋆
பல்லரசவிந்து வீழப்⋆ பாரதப் போர் முடித்தாய்⋆
நல்லரண் காவின் நீழல்⋆ நறை கமழ் நாங்கை மேய⋆
கல்லரண் காவளம் தண் பாடியாய்!⋆ களைகண் நீயே (6)

மூத்தவற்கரசு வேண்டி⋆ முன்புதூதெழுந்தருளி⋆
மாத்தமர் பாகன் வீழ⋆ மத கரி மருப் பொசித்தாய்⋆
பூத்தமர் சோலை ஓங்கிப்⋆ புனல் பரந்தொழுகும் நாங்கை⋆
காத்தனே! காவளம் தண் பாடியாய்!⋆ களைகண் நீயே (7)

ஏவிளங்கன்னிக்காகி⋆ இமையவர் கோனைச் செற்று⋆
காவளம் கடிதிறுத்துக்⋆ கற்பகம் கொண்டு போந்தாய்!⋆
பூ வளம் பொழில்கள் சூழ்ந்த⋆ புரந்தரன் செய்த நாங்கை⋆
காவளம் பாடி மேய⋆ கண்ணனே! களைகண் நீயே (8)

சந்தமாய் சமயம் ஆகிச்⋆ சமயவைம் பூதம் ஆகி⋆
அந்தம் ஆய் ஆதி ஆகி⋆ அரு மறை அவையும் ஆனாய்⋆
மந்தம் ஆர் பொழில்கள்தோறும்⋆ மட மயில் ஆலும் நாங்கை⋆
கந்தம் ஆர் காவளம் தண் பாடியாய்!⋆ களைகண் நீயே (9)

‡மா வளம் பெருகி மன்னு⋆ மறையவர் வாழும்⋆ நாங்கைக்
காவளம் பாடி மேய⋆ கண்ணனைக் கலியன் சொன்ன⋆
பா வளம் பத்தும் வல்லார்⋆ பார்மிசை அரசர் ஆகிக்⋆
கோவிள மன்னர் தாழக்⋆ குடை நிழல் பொலிவர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥